| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 10/02/2024 | முதல் | 14/02/2024 |
| | அறிக்கை எண் : | 012/ 2024 | வெளியீட்டு நாள் : | 09/02/2024 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (04.02.2024 முதல் 08.02.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 14-02-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/02 | 05/02 | 06/02 | 07/02 | 08/02 | தேதி | நாள்-1 10/02 | நாள்-2 11/02 | நாள்-3 12/02 | நாள்-4 13/02 | நாள்-5 14/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 1 |
| 34 | 35 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 36 | 37 | 37 |
| 22 | 22 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 23 | 22 | 23 |
| 3 | 3 | 2 | 2 | 2 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 2 | 0 | 2 | 3 |
| 81 | 76 | 85 | 87 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 100 |
| 41 | 44 | 44 | 41 | 37 | | 40 | 40 | 40 | 50 | 40 |
| 8 | 7 | 7 | 11 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 10 | 10 | 8 | 10 |
| தென் கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 14 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

14ம் தேதியன்று மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாலும் அதனை தொடர்ந்து வரும் 4 நாட்களுக்கு (10 முதல் 13 வரை) வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளதாலும், விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (9 முதல் 22 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**
நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 9 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இயல்பை விட குறைந்தது முதல் இயல்பை ஒட்டிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**
9 பிப்ரவரி முதல் 15 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**
9 பிப்ரவரி முதல் 15 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.16° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெங்காயம், தக்காளி, கால்நடை.**

**வெங்காயம்:**
வெங்காய பயிரில் போட்ரிடிஸ் இலைக்கருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியானது இலைப் பரப்பில் நூற்றுக்கும் அதிகமான வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்படும்.

இந்த நோய் வேகமாகப் பரவி, செடியின் அனைத்து பகுதியையும் மடியச் செய்யும். மிதமான தாக்குதல் விளைச்சலைப் பாதிக்காது. ஆனால் அதிக தாக்குதல் ஏற்பட்டால் விளைச்சலை வெகுவாகக் குறைக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 15கிராம் புரோப்பிநெப் 70 சதம் உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**புடலைங்காய்:**

கொடி வகை காய்கறி பயிர்களில் பெண் பூக்களை அதிகரிக்க எத்ரல் 100 பிபிஎம் அதவாது 10 லிட்டர் தண்ணீரில் 1 மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் போது தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளில் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கு (RDVK) ரானிகெட் நோய் தடுப்பு மருந்து கொடுக்கபடுகிறது. விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.